# “இசையே இறைவன்”

ஒளி, ஒலி, ஆகிய இரண்டு தத்துவங்கள் இந்த ப்ரபஞ்சம் முழுதும் நிறைந்துள்ளது. எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவன் ஒளி, ஒலி, மோனம், காரண காரியத்திற்காக இருள் (ஒளியற்ற நிலை) ஆகிய நிலைகளிலிருந்து வேண்டியவற்றை அருளுகின்றான். இவ்வாறு இந்த ப்ரபஞ்சத்தை படைத்து, காத்தருளும் இறைவன் பரமபிதா என்றழைக்கப்படுகிறார்.

வணங்குவதற்கும், போற்றுதலுக்கும் உரிய பரமபிதாவை துதிசெய்ய பலவழிகள் உள்ளன. அவ்வாறுள்ள பலவழிகளில் இசை மூலம் (ஒலி நிலை) ஆராதனை செய்வதே உலகில் சிறந்த வழியாக பழங்காலம் முதல் பின்பற்றப்பட்டு வருகிறது.

மேலும் இசை மூலம் ஆராதனை செய்யும் பொழுது நமது மனம், எண்ணம், சிந்தை ஆகியவை தெளிவு அடைவது மட்டுமல்லாமல் எல்லாம் வல்ல பரம்பொருளை நமக்குள்நாமே உணர முடிகிறது. மேலும் எல்லாம் வல்ல ஆண்டவரின் நாமம் மேலும் மேலும் உயர்த்தப்படுகிறது.

ஒவ்வொரு பொருளிலும் சிறப்பம்சம் என்பது மறைபொருளாகத்தான் இருக்கும். அதை உணரமட்டுமே முடியும் பார்க்க முடியாது. பூவிற்கு மணம் சிறப்பு, கனிகளுக்கு சுவை சிறப்பு இதுபோல் ஜீவராசிகளுக்கு உயிரும் உணர்வும் சிறப்பம்சமாகும்.

மேற்சொன்ன பொருட்கள் அனைத்தையும் கண்ணால் பார்க்க முடியும் ஆனால் அவற்றின் சிறப்பம்சங்களை பார்க்க முடியாது உணர மட்டும் தான் முடியும். எனவே உணர்வே இறைநிலை எனக்கூறலாம். இவ்வாறு தான் இசையையும் நன்கு உணர்ந்து அனுபவிக்க முடியும். ஆனால் பார்க்க இயலாது. அகக்கண்ணால் (உணர்வு) மட்டுமே பார்க்க முடியும். ஒருவர் பரம் பொருளை உணரும் போது இயற்கையாகவே புறவிழிகள் மூடிக்கொண்டு அகக்கண் திறந்து கொள்ளும். இதன் காரணமாகவே ஒருவர் மனமுருகிப் பாடும் பொழுது அவரையும் அறியாமல் புறவிழிகள் மூடிக்கொள்கிறது. மேலும் உணர்வாகிய அகக்கண் மூலம் ஆண்டவரை உணர்ந்து அனுபவிக்கிறார்.

இவ்வாறு ஆண்டவரை துதிசெய்ய முன்னோர்கள் செந்தமிழில் பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். இந்த கீர்த்தனைகள் அனைத்தும் ஆண்டவரின் கருணையினால், அவரின் ஆசீர்வாதத்தினால் இயற்றப்பட்டு உயிருள்ள உணர்வுள்ள பாடல்களாக விளங்குகிறது. இவற்றை கர்நாடக சங்கீத முறையில் பயிற்சி செய்து பாடும் பொழுது அவற்றின் முழு ஸ்வரூபம் நன்கு வெளிப்படுகின்றது.

ஆனால் பொரும்பாலும் மேற்கத்திய இசைமுறையிலேயே இந்த கீர்த்தனைகள் பாடப்படுவதால் அவற்றின் உயிர்நிலையும் உணர்வு நிலையும் சற்று குறைவாகவே உள்ளது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் மொழிக்கும் இசை வடிவத்திற்கும் மிகுந்த இணைப்புள்ளது. மேற்கத்திய இசை என்பது அந்நாட்டவரின் மொழிக்கு மட்டுமே பொருந்தும். மேலும் ஹிந்தி, போன்ற வடமாநில மொழிகள், ''ஹிந்துஸ்தானி'' இசை வடிவுக்கு மட்டுமே பொருந்தும். அதுபோல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், போன்ற மொழிகள் கர்நாடக சங்கீத வடிவத்திற்கு மிகவும் பொருந்தி வரும். மேலும் உலகில் பலவகையான இசை வடிவங்கள் இருந்தாலும் கர்நாடக சங்கீத (மரபு வழி இசை) இசை முறையே சிறந்ததாக அனைவராலும் போற்றப்பட்டு வருகிறது. மேலும் இந்த ப்ரபஞ்சத்தில் காலம் அறிய முடியாத சிறந்த மொழிகளாக மிகச்சில மொழிகளே உள்ளன. அவற்றுள் தமிழும் ஒன்று என்பது நாமறிவோம்.

இவ்வாறு பழமை வாய்ந்த சிறப்பு மிக்க தமிழ் மொழியில் இயற்றப்பட்ட பாடல்களை நம் மொழிக்கே உரிய இசைவடிவமான கர்நாடக சங்கீத முறையில் பாடுவதே சிறப்பாகும்.

பழமையான சிறப்பான மொழி, இசை ஆகியவற்றால் பழமைக்கும் பழமையான, எல்லாவற்றிற்கும் ஆதியான ஆண்டவரை துதித்தல் என்பது நமக்கெல்லாம் கிடைத்த பெரும் பாக்கியம் ஆகும்.

நமது கிறிஸ்தவ கீர்த்தனைகள் என்ற புத்தகத்தில் 300க்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் உள்ளன. இவை அனைத்தும் வேதநாயகம் சாஸ்திரியார் உட்பட பல ஆன்றோர்களால் இயற்றப்பட்டவையாகும். இப்பாடல்கள் மிகவும் எளிமையாகவும், சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்தவைகளாகவும் அருட்சிந்தை தருபவைகளாகவும் உள்ளன.

மேலும் பாடல்களில் எதுகை, மோனை, சந்தம், உவமை, உவமானங்கள், பா வடிவங்கள் போன்ற இன்னும் நிறைய தமிழ் இலக்கண வடிவங்கள் ரசம் ததும்ப கொஞ்சி விளையாடுகின்றன.

மேலும் ஒவ்வொரு பாடலின் உணர்வுக்கு ஏற்ற ராகங்களையும், சந்ததங்களுக்கு ஏற்ற தாளங்களையும் சிறப்பாக இயல்பாக அமைத்துள்ளார்.

எனவே இந்த சிறந்த கீர்த்தனைகளைப்பாடி ஆண்டவரின் ஆசீர்வாதத்திற்கும், மொழி வளர்ச்சிக்கும் பாத்திரர்களாக ஆவோமாக.

வணக்கம்.

கலைவளர் மணி, கலாஞானமணி,
**கோவை S.சிவா**
இசை ஆசிரியா